**ATM உள்ளே நீங்கள் செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை**

**செய்யவேண்டியவை**

- ☑ உங்களது ATM பரிவர்த்தனைகளை மிகவும் ரகசியமாக செய்யுங்கள்.
- ☑ உங்கள் ATM பாஸ்வேர்டு எனப்படும் சுய அடையாள எண்ணை இயந்திரத்தில் உள்ளிடுகையில் யாரையும் பார்க்கவிடாதீர்கள்.
- ☑ பரிவர்த்தனைகளை முடித்த பின்னர், திரையில் Welcome Screen (துவக்கத் திரை) வருகிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.
- ☑ உங்கள் PIN எண்ணை ரகசியமாக வைத்துக்கொள்ளுங்கள்.
- ☑ உங்கள் PIN-ஐ மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்.
- ☑ பரிவர்த்தனைகள் குறித்த உடனடித் தகவல்களைப் பெற உங்களுடைய தற்போதைய மொபைல் எண்ணை வங்கியில் பதிவு செய்வதை உறுதி செய்திடுங்கள்.
- ☑ ATM இயந்திரத்தோடு வேறு ஏதேனும் கூடுதல் இயந்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளதா எனப் பாருங்கள்.
- ☑ சந்தேகிக்கக்கூடிய வகையில் ஏதாவது தென்பட்டால், அருகில் இருக்கும் வங்கிக் கிளையை தொலைபேசியில் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
- ☑ பரிவர்த்தனைகள் தொடர்பான SMS மற்றும் வங்கி ஸ்டேட்மெண்ட்-களை அவ்வப்போது பரிசோதித்துக் கொள்ளுங்கள்.
- ☑ பணம் வெளியில் வரவில்லை என்றால் வங்கிக்கிளை தொடர்பு எண்ணில் புகார் அளியுங்கள்.

**செய்யக்கூடாதவை**

- ☒ உங்கள் டெபிட் கார்டை ATM உள்ளே விட்டுச் செல்லாதீர்கள்.
- ☒ ATM பரிவர்த்தனைகளுக்காக உங்கள் கார்டு அல்லது PIN எண்ணை யாரிடமும் தராதீர்கள்.
- ☒ உங்கள் PIN எண்ணை அட்டையில் அல்லது பர்ஸ் அல்லது கார்டு வைக்கும் எந்தப் பொருளின் மீதும் எழுதி வைக்காதீர்கள்.
- ☒ பரிவர்த்தனை செய்யும் போது மொபைல் போனை பயன்படுத்தாதீர்கள்.
- ☒ ATM பயன்படுத்தும் போது எந்த வகையிலும் உங்கள் கவனத்தைச் சிதறவிடாதீர்கள்.
- ☒ எளிதாகக் கண்டுபிடிக்கும் வகையில் பிறந்தநாள் போன்ற விபரங்கள் எதையும் உங்கள் PIN எண்ணாக வைக்காதீர்கள்.
- ☒ ATM உள்ளே அந்நியர்களின் உதவியை எப்போதும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.